**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.</u>**
**<u>அசல் வழக்கு எண்</u>.120/2019**

பெயர்-திரு. செல்வக்குமார் நாள்.23.07.2025

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.1 : 1-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை-**

1. வாதி ஜெகதீசனை 40 ஆண்டுகளாக தெரியும். எனது குடும்ப நண்பர். தாவா சொத்து நேரு நகரில் உள்ளது. வீதி பெயர்,வார்டு எண் தெரியாது. வாதி சொத்திற்கும் கிழபுறம் 1-ம் பிரதிவாதி வீடு உள்ளது. 1-ம் பிரதிவாதியின் அப்பாவை தெரியும், அவரது தாத்தா பற்றி எனக்கு தெரியாது. 1-ம் பிரதிவாதியின் தாத்தா சுப்பண்ணன் பெயரில் எத்தனை ஆண்டுகளாக சொத்து உள்ளது என்று எனக்கு தெரியாது. வழக்கு தாக்கல் செய்துள்ள ஜெகதீசனுக்கு அவரது அம்மா செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் எழுதிக் கொடுத்துள்ளார். செட்டில்மெண்ட் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள செக்குபந்தி விவரம் தெரியுமா என்றால், வடபுறம், மேபுறம் உள்ளவர் பெயர் தெரியாது. கிழபுறம் சரவணன் சொத்து உள்ளது.

2. வாதி ஜெகதீசன் வீட்டிற்கும், 1-ம் பிரதிவாதி வீட்டிற்கும் இடையே சந்து உள்ளது தெரியும். எத்தனை அடி என்று எனக்கு தெரியாது. வழக்குரையின் சொத்துவிவரத்தில் " சுப்பண்ண கவுண்டர் வீட்டு காம்பௌண்ட் சுவற்றிற்கும், சுண்ணாம்பு பூசுவதற்காக 3 1/2 அடி அகலத்தில் விட்டிருக்கும் சந்திற்கும் மேற்கு " என்று எழுதியிருந்தால் என்ன அர்த்தம் என்றால், சந்திற்கும் மேற்கு வாதி ஜெகதீசன் வீடு உள்ளது என்று அர்த்தம். இந்த வழக்கில் வாதி அவருடைய செட்டில்மெண்ட் ஆவணத்தை வைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்றால், செட்டில்மெண்ட் ஆவணம் மற்றம் பட்டாவின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

3. தாவா சொத்தை சர்வே செய்யும்போது, நான் இருந்தேன். பட்டா வழங்கும்போது நான் இல்லை. தாவா சந்து 2 1/2 அடி ஜெகதீசனுக்கு சொந்தமானது, 1 அடி பொதுவானது என சாட்சி சொல்ல வந்துள்ளேன். 2 1/2 அடி வாதி ஜெகதீசனுக்கு பாத்தியப்பட்டது என காட்ட வாதி பத்திரம் எதுவும் காட்டினாரா என்றால், இல்லை.சர்வேயர் அளக்கும்போது சொன்னதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். வாதிக்கு பட்டா வழங்கும்போது நான்

சாட்சியாக சென்றிருந்தேனா என்றால், இல்லை. வாதி ஜெகதீசன் மேற்படி சந்தில் கட்டிடம் கட்ட விடாமல், 1-ம் பிரதிவாதி தடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியும். வாதியின் அத்தில் கட்டிடம் கட்டுமாறு நான் அறிவுரை கூறினேனா என்றால், சொன்னேன். வாதியின் தாயார் கிரையம் பெற்ற சொத்தைதான் வாதிக்கு செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியும்.

4. பிரமாண வாக்குமூலத்தை நான் படித்துப் பார்த்து கையொப்பம் செய்தேன் என்றால், ஆமாம். தாவா சொத்து ஆதியில் வாதியின் தாயாருக்கு எப்படி வந்தது என எனக்கு தெரியும். அனைத்து ஆவணங்களிலும் சுப்பண்ண கவுண்டர் வீட்டிற்கும் மேற்கு எனத்தான் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியும். நான் வாதியின் நண்பர் என்ற முறையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. நான் பத்திரங்களின் விவரங்களை தெரிந்து கொண்டு வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**4-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.**

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA

Digitally signed by SELVAM SUSILA
Date: 2025.07.23 16:05:40 +0530

District Munsif